T-UN-664

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
தமிழ்நாடு

தமிழ்ப் பல்கலைக் கழகச்

செய்தி மலர்

மலர்:3 திருவள்ளுவராண்டு 2015 வைகாசி-1 இதழ்:2
14-5-1984

காஞ்சி தத்துவ மையத்தில் பன்னிருதிருமுறை ஆய்வுக் கட்டில் கால்கோள் விழா



"மனிதன் மனிதனாக வாழ இயலாத இந் நிலையில், வழிகாட்டும் நிலையிலுள்ள திருமுறைகளுக்கு ஆய்வுக்கட்டில்அமைக்கப் பெற்று விளங்கும் இந்த நற்பணி வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும்".

– என்று தத்துவ மையத்தில் நிகழ்ந்த பன்னிரு திருமுறை ஆய்வுக்கட்டில் கால்கோள் விழாவில் துவக்கவுரை ஆற்றிய அறநிலையத்துறைச்செயலாளர் திரு ஆர்.சன்முகசிகாமணி இ.ஆ.ப., அவர்கள் குறிப்பிட்டார்கள்.

கற்றோர் போற்றும் காஞ்சியில் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவியுள்ள தத்துவ மையத்தில் சென்னைவாழ் திருமதி ருக்மணி, திரு கே.கிருட்டிண சாமி பிள்ளை ஆகியோர் நல்கிய கட்டளை அடிப் படையில் நிறுவப்பெற்ற 'பன்னிரு திருமுறை ஆய்வுக் கட்டி'லின் கால்கோள் விழா 17-4-'84 காலை 10-30 மணியளவில் துவங்கியது. விழாவைத் துவக்கி வைக்க வருகை புரிந்த அறநிலையத்துறைச் செயலாளர் திரு ஆர். சண்முகசிகாமணி இ.ஆ.ப., அவர்கள் குத்து விளக்கு ஏற்றிவைத்து விழா அரங்கினுள் நுழைந்தார். தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கிய விழாவில் மையத்தின் இயக்குநர் டாக்டர் வ.ஆ. தேவசேனாபதி அவர்கள் வரவேற்றார். மாண்புமிகு டாக்டர் வ.அய்.சுப்பிரமணியம்அவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பில் திரு கே. கிருட்டிணசாமி பிள்ளை, திருமதி ருக்மணி ஆகியோ–ருக்கு மாலைகள் அணிவித்தார்கள்.

விழாவின் தலைமையுரையினை ஆற்றிய மாண்புமிகு துணைவேந்தர் அவர்கள் தனியார் ஓர் இலட்ச உருவாக்கு மேல் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் கட்டளை நிறுவுவது முதன் முதலில் திரு கிருட்டிணசாமி பிள்ளையும் குடும்பத்தினரும்தாம் என்று குறிப்பிட்டு, "தத்துவப்படிப்பு அண்மைக் காலத்தில் தமிழகத்தில் வலுவிழந்திருந்தாலும்காஞ்சியில், கிறித்து பிறப்பதற்குச் சற்று முன்னும் பின்னும் வலுப்பெற்றிருந்தது. இங்குத்தான் புத்த மதத்தின் பல பிரிவுகளும் கால் கொண்டன. தத்துவப் படிப்பிற்கு அடித்தளமாக அமைவது தருக்கம்.

அதனையறிந்த பலர் (தருமகீர்த்தி, புத்த கோசன் முதலியவர்கள்) இந்த நகரைச் சேர்ந்தவர்கள். இருவரும் நாலந்தா பல்கலைக்கழகத்தில் பெரும்பதவி வகித்தவர்கள். ஒருவர் அதன் தலைமை இடத்தை அலங்கரித்தார்"என்றுகூறினார்.

கட்டிலின் பொறுப்பேற்றுப் பெரிய புராண ஆய்வினை மேற்கொள்ள இசைந்துள்ள பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் அவர்கள் நன்றி கூறினார்.

தமிழ்க் கலை

தமிழ் 1. கலை 3இன் பொருளடக்கம்

கட்டுரை
- நிருவாகஇயல்: அறிமுகம்
- சேலம் செழியதரையர்கள்—ஒரு சிற்றாய்வு
- கடம்பர் யாவர்?
- புறஞ்சேரியில் நிகழ்ந்த புதுமை
- செங்கற்சுவர்களில் ஏற்படும் விரிசல்களும் தவிர்க்கும் வழிகளும்

கருத்துக் கோவை
- சப்பான் நாட்டில் திராவிட மொழி ஆராய்ச்சியை விரிவுபடுத்துவதற்காக நடந்த சொல்லாடற் குறிப்புகள்
- சிவாசி வெங்காசிக்கு எழுதிய கடிதங்கள்
- கலைச்சொல்லாக்க முயற்சி—இதுவரை
- தமிழ்நாட்டுப் பொம்மலாட்டம் —கள ஆய்வுக் குறிப்புகள்

மதிப்புரை
- கருவூரார் பலதிரட்டு

மூலிகைப் பண்ணை

'எத்தைச் சொன்னாலும் கேட்கும்
நந்தைச் சூரி வேர்'

என்பது ஒரு மூலிகைப்பழமொழி. இதே போல் எதற்கும் பயனற்றவை என்று ஒதுக்கப்பட்டவையும் உள. அவற்றுள் சிலவற்றை வளர்த்து மருத்துவக்குணங்கள் அவற்றிடம் உள்ளனவா என்று கண்டறிந்து அவைகளையும் மூலிகைகளாகப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு பயன்படுத்துவதற்குரிய ஆய்வு, தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் சித்தமருத்துவப் பிரிவில் மேற்கொள்ளப்படுகிறது.

மலைவாழ் பழங்குடி மக்களிடமிருந்து கொண்டு வரப்பட்ட ஒரே இன மூலிகையை அவ்வினத்தைச் சேர்ந்த உள்நாட்டில் (தாழ்ந்த பரப்பில்) உள்ள மூலிகையுடன் செயற்கை முறையில் இன விருத்தி செய்து புதியதோர் வீரியமுள்ள மூலிகையை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கெல்லாம் அடித்தளமாக மூலிகைப் பண்ணைக்கான நிலம் சீராக்கும் பணி 1983 டிசம்பர் முதல் நாள் தொடங்கியது. 1984 சனவரித் திங்கள் 7ஆம் நாள் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் மாண்புமிகு டாக்டர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்களின் சீரிய தலைமையில் தமிழ் நாடு அரசு இந்திய மருத்துவக் கல்வி இயக்குநர் திரு இலட்சுமி காந்தன் பாரதி இ.ஆ.ப., அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இப்பண்ணையில் சுமார் 20 ஏக்கர் நிலம்பயன் படுத்தப்பட்டு வருகிறது. இம்மூலிகைப் பண்ணையில் மூலிகை வளர்ப்பதற்காகச் செடிகளுக்கு வேண்டிய தட்ப வெப்ப நிலையைச் சீராகக் கொடுக்கும் முறையில் 'மலைத்தோட்ட நாற்றங்கால்' அமைப்பில் செயற்கை முறை நாற்றங்கால் ஒன்று சுமார் 3500 சதுர அடிகள் பரப்பளவில் அமைக்கப் பட்டுள்ளது.

தற்பொழுது இம்மூலிகைப்பண்ணையில் தஞ்சாவூர் மற்றும் சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்தும் 250 மூலிகைகள் சேகரிக்கப்பட்டு நடப்பட்டுள்ளன. மூலிகைகள் நாற்றங்கால் தொட்டியிலும், மற்றும் அதற்குரிய தனிப்பாத்திகளிலும் நடப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன. மேலும், தென்னிந்தியாவிலுள்ள மலைவாழ் பழங்குடி மக்களால் மூலிகைகளாகப் பயன்படுத்தப்படும் 75 மூலிகைகள் இது வரை தொகுக்கப்பட்டு நடப்பட்டுள்ளன.

இம் மூலிகைப்பண்ணை ஆராய்ச்சிப்பணிமட்டுமன்றி சித்த மருத்துவம் கற்கும் மாணவர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் மூலிகைகளின் பயன்கள் பற்றி அறிந்துகொள்ளவும் ஒரு மாதிரிப் பண்ணையாக அமைந்துள்ளது.

இப்பண்ணையைச் சித்தமருத்துவத்துறைப் பேராசிரியர் முனைவர் ஜ. சாதிக் அவர்களின் மேற்பார்வையில் திரு நாகேந்திர பிரசாத் அவர்கள் பேணி வருகிறார்.

காஞ்சி தத்துவ மைய இயக்குநர் திரு வ.ஆ. தேவசேனாபதி அவர்களுடன் ஓர் உரையாடல்

1) காஞ்சி மையம் துவக்கப்பட்டதன் நோக்கம் என்ன?

காஞ்சி மையம், காஞ்சியின் வரலாற்றுப் பெருமையாக ஏறத்தாழ 2000 ஆண்டுகளாக இருந்ததைப் புதுப்பிப்பதோடு இன்றும் இனி வருங் காலத்திலும் தத்துவம், சமயம் ஆகியவற்றின் ஆராய்ச்சிக்குச் சிறப்பாக வழிகாணவேண்டுமென்பதே இதன் நோக்கமாகும்.

2) பணிகளைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா?

எந்த மொழிக்கும், எந்தத் துறைக்கும் தடை விதிக்காமல் அனைத்துத் துறைகளுக்கும், பல மொழிகளிலும் கிடைக்கக்கூடிய ஆராய்ச்சி நூல்களைக் காஞ்சி மைய நூலகத்தில் சேர்த்திருக்கிறோம்.

வேத காலம் முதற்கொண்டு நம் நாட்டுச் சமயங்களை ஆராய்வதற்கும், சமண பௌத்த சமயங்களை ஆராய்வதற்கும், இசுலாமிய, கிறித்துவ மதங்களை ஆராய்வதற்கும் சென்ற 10 ஆண்டுகளில் நடந்த ஆராய்ச்சிகளைப் பற்றி ஒரு மதிப்பீடு செய்தால் அதைக்கொண்டு இனிவரும் ஆராய்ச்சிப் போக்கையும் தெரிந்துகொள்வதற்காக, நாங்கள் 6, 7, 8 அக்டோபரில் ஒரு கருத்தரங்கம்நடத்தினோம்.

3) வெளி நாடுகளிலிருந்து வந்து இதில் எவரேனும் கலந்துகொண்டார்களா?

மேனாட்டார் பலர் இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள முடியாத போதும் எங்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்தோடு தங்களுடைய ஆராய்ச்சிக் கட்டுரைகளை எங்களுக்கு அனுப்பி வைத்தார்கள். இது மிகவும் பாராட்டத்தக்க தொண்டாகும். கருத்தரங்கக் கட்டுரைகள் எல்லாவற்றையும்சேர்த்துக் காஞ்சிமையத்தின்வெளியீடாகக் கொண்டுவர இருக்கின்றோம்.

4) வெளிநாட்டுப் பேராசிரியர்கள் எவரேனும் இம்மையத்திற்கு வருகை தந்திருக்கின்றனரா?

ஆம், பிப்ரவரி 7ஆம் நாள் இங்கிலாந்து லங்காசயர் பல்கலைக் கழகத்தைச் சார்ந்தவரும் ஆறு மாதத்திற்கொருமுறை அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் பணியாற்றுபவருமான பேராசிரியர் லிவியன்ஃஸ்மார்ட் இம்மையத்திற்குவந்திருந்தார்கள். அவருடைய பார்வையில்தான் இங்குப் பணியாற்றுகின்ற பேராசிரியர் இராமகிருட்டிணன் அவர்கள் பிஎச்.டி ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினார்கள். இங்கு மூன்று மணி நேரம் எங்களுடன் கலந்துரையாடினார்கள். அது பெரிய அறிவு விருந்தாக அமைந்தது.

மாநில வங்கியின் அறக்கட்டளை

"இன்று தமிழ்ப் பல்கலைக் கழகம் ஐந்து இலட்சம் உருவா அறக் கட்டளையாகப்பெறுகிறது. இதே போல இன்னும்பலஇலட்சங்களைப் பெற்றுத் தமிழ்ப்பல்கலைக்கழகம் ஆராய்ச்சியைப்பெருக்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

—என இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் மாண்புமிகு ஆர்.வேங்கடராமன் அவர்கள் பாரத மாநில வங்கி, தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு அறக் கட்டளைக் கொடையாக ஐந்து இலட்சம் உருவா வழங்கிய விழாவில் வாழ்த்தினார். பாரத மாநில வங்கியின் சமூக அமைப்பு, சமூக வளர்ச்சியை ஆராய்வதற்கு ஆய்வுக்கட்டில் ஒன்றை நிறுவ அறக்கட்டளை வழங்கும் விழா 14-4-'84 மாலை பாரத மாநில வங்கியின் தஞ்சை அலுவலகத்தில் நிகழ்ந்தது.

பாரத மாநில வங்கியின் பொது மேலாளர் திரு வி.எம்.டி. சோசி தமிழ் ஒலிப்பில் வரவேற்புரையைப் படிக்க, இந்தியப் பாதுகாப்புஅமைச்சர் மாண்புமிகு ஆர்.வேங்கடராமன் தலைமையில்பாரத மாநில வங்கியின் தலைமை மேலாளர் திரு கே.டி நய்யார் உரு.5 இலட்சத்திற்குரிய காசோலையை வழங்கினார். அறக்கட்டளையை ஏற்றுக் கொண்ட தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்கள்,

"வங்கி தந்த பொருளிலிருந்து கிடைக்கும் பொலிசை அல்லது வட்டிஆண்டொன்றுக்கு 55 ஆயிரம் உருவாக்கு மிகாது.ஆனால், பல்கலைக் கழகம் மேலும் மும்மடங்கு செலவுசெய்து, செயற்பாடுமிக்க துறையாக வெகுவிரைவில் இந்தக் கட்டிலை மாற்றிவிடும் என உறுதி கூறுகிறேன். தொழில் வளமும், அறிவு வளமும் தமிழகத்தில் பெருக அயராது உழைத்த மாண்புமிகு டாக்டர் ஆர். வேங்கடராமன் முன்னிலையில் இந்த உறுதியைக் கூறுவதில் எனக்குப் பெருமையுண்டு. நீங்கள் தந்ததைவிட, பொருள்நிலையிலும் அறிவு நிலையிலும் நீங்கள் பெறும்கைம்மாற்றின் அளவு குறைந்ததாக இராது என்று மட்டும் மீண்டும் துணிந்து கூற விரும்புகிறேன்" —என்று கூறினார்கள்.

பாரத மாநில வங்கி மதுரை வட்டாரத் தலைமை மேலாளர் திரு எம். கலியாணசுந்தரம் அவர்கள் நன்றி கூறினார்கள். இவ்வறக்கட்டளையின் கீழ், தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சமூகவியல் பற்றி டாக்டர் தேக்கமலை அவர்களைப் பேராசிரியராகக் கொண்டு புள்ளியியல், பொருளியல், பொறியியல் அறிஞர்கள் மூவர் ஆராய்ந்து வருகின்றனர்.

இவ்வறக்கட்டளை அமைவதற்குப்பாரத மாநில வங்கி மேலாளர் திரு சோம.முத்தையா அவர்கள் மிகுதியும் உதவியதோடு விழாவையும் செம்மையாக நிகழ்த்தினார்கள்.

இயற்கையெய்தினார்

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழு உறுப்பினர் திரு டி.பி.எம். பெரியசாமி அவர்கள் மே 3ஆம்நாள் இயற்கையெய்திய செய்தியைத்துயரத்துடன் அறிவிக்கிறோம்.

தமிழ்ப் பல்கலைக் கழகச்

செய்தி மலர்

திங்களிதழ்

பதிவெண் 15033/82X7

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர் - 613 007.

தமிழ்நாடு - இந்தியா.

இ.அ.அ. மட்டும்.

திருமதி புலவர் திலகம்
3/1709, பிச்சாண்டி முதலி சந்து
மானோசியப்பா வீதி
தஞ்சாவூர்

நீர் அகழாய்வு மையம் திறப்பு விழா

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவும் நீர் அகழாய்வு மையத்தின் திறப்பு விழா 29-4-'84 ஞாயிறு அன்று காலை 10-30 மணியளவில் தமிழ்ப்பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வ.அய். சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

தமிழ்ப் பல்கலைக் கழக நிகழ்ச்சிகள்:

14-4-'84
பாரத மாநில வங்கியின் அறக்கட்டளை நிறுவுவிழா
இடம்: பாரத மாநில வங்கி, தஞ்சாவூர்

15-4-'84
பன்னிருதிருமுறை ஆய்வுக்கட்டில் கால்கோள் விழா
இடம்: தத்துவ மையம், காஞ்சிபுரம்

26-4-'84 - 27-4-'84
பேரகராதிக் கலைக் கருத்தரங்கு
இடம்: தமிழ்ப் பல்கலைக் கழக புதிய வளாகம் 'குறிஞ்சி இல்லம்'

27-4-'84
தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-தெய்வச் சிலையார் உரை - நூல் வெளியீட்டு விழா
இடம்: தமிழ்ப்பல்கலைக் கழக புதிய வளாகம் 'குறிஞ்சி இல்லம்'

28-4-'84
நான்கு வார இந்திய மொழிச்சான்றிதழ் வகுப்பு
இடம்: பல்கலைக் கழக வளாகம்

29-4-'84
1) நீர் அகழாய்வு மையம் திறப்பு விழா
இடம்: நீர் அகழாய்வு மையம், மண்டபம், இராமநாதபுரம்
2) மு. இராகவையங்கார் எழுதிய ஆராய்ச்சித் தொகுதி - நூல் வெளியீட்டு விழா
இடம்: நீர் அகழாய்வு மையம், மண்டபம், இராமநாதபுரம்
3) அறிவியல் சொற்பொழிவு (நான்காவது)
இடம்: கூலமங்கலம்
சொற்பொழிவு: டாக்டர் எம். மெய்யப்பன்
தலைப்பு: சூரிய ஆற்றலும் பயன்களும்

தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடுகள்:

1)	மராட்டியர் செப்பேடுகள் 50	உரு. 150
2)	கலித்தொகை - இ.வை. அனந்த ராமையர் பதிப்பு	உரு. 150
3)	ஆராய்ச்சித் தொகுதி -மு. இராகவையங்கார்	உரு. 100
4)	சங்க இலக்கியக் கட்டுரைகள் -கருத்தரங்கம்-	உரு. 30
5)	தொல்-சொல்-தெய்வச்சிலையார் உரை	உரு. 60
6)	தொல்காப்பியம்-நன்னூல் சொல்லதிகாரம்- -க. வெள்ளைவாரணர்	உரு. 75
7)	நன்னூல் காண்டிகையுரை -ஆறுமுக நாவலர்	உரு. 65

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை.

அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக அச்சகம், தஞ்சாவூர்-613 001.